**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**<u>CC.NO-51/2024</u>**

**Dated :03.03.2026**

**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW1 Examined as PW1 (Defacto Complainant)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அகிலா | வயது | : | 39 |
| கணவர் பெயர் | : | பாஸ்கர் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | திருக்கோகர்ணம் | தொழில் | : | ஜவுளிக்கடையில் வேலை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர் )

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து தஞ்சாவூரில் ஜவுளிக்கடையில் வேலை செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்து போன பாஸ்கர் எனது கணவர் ஆவார். கடந்த 08.06.2024 ஆம் தேதி, காலை சுமார் 10.00 மணியளவில், நான் என் வீட்டில் இருந்த போது, நடுக்காவேரியில் உள்ள எனது நாத்தனார் வீட்டிற்கு Jupiter இருசக்கர வாகனத்தில் சென்றிருந்தார். அன்றைய தினம் காலை 11.30 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது, இஸ்மாயில் என்பவர் எனக்கு போன் செய்து, சோழகம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் எனது கணவர் லாரியில் அடிபட்டுவிட்டதாக தகவல் சொன்னார். நான் உடனடியாக எனது கணவருடன் வேலை செய்த ஜெயக்குமார், பாலாஜி ஆகியோருடன் சம்பவ இடத்திற்கு சென்றேன். அங்கு எனது கணவர் விபத்தில் அடிபட்டு கிடந்தார். என் கணவரின் இரண்டு கால்களிலும், தலையிலும் காயம்பட்டு, சம்பவ இடத்திலேயே இறந்திருந்தார். அதன் பிறகு எனது கணவரை புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டு சென்றோம்.

**சாட்சியின் கையொப்பம்** **மா.உ/நீ.ந**

2) அதன்பிறகு, ஆதனக்கோட்டை காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இந்த புகார் மனு நான் கொடுத்தது தான். **(மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் எனது கணவரின் பிரேத்தை பிரேத விசாரணை செய்தார்கள். நானும் உடன் இருந்தேன், என்னையும் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் எழுதிக்கொண்டதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் எனது உறவினர்கள் புகார் மனு எழுதினார்கள், நான் அதில் கையொப்பம் செய்தேன். நான் இரண்டு, மூன்று கையொப்பங்கள் செய்திருப்பேன் என்றால் ஒரு கையொப்பம் தான் செய்தேன். இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளோம். நான் சம்பவ இடம் சென்று பார்த்த போது, சாலையின் வலது புறத்தில், எனது கணவர் கிடந்தார் என்றால் சரிதான். நான் சொல்லியுள்ளவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் எனது கணவரின் இறப்பிற்கு இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக எதிரி மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.03 15:28:45 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**சாட்சியின் கையொப்பம்** **மா.உ/நீ.ந**